**சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**ஓ.எஸ்.எண். 116 / 2016**
**நாள் : 08 / 01 / 2020.**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | வா.த.சா.1. திரு. நிர்மல்குமார் |
| வயது | : | |
| த/பெ | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| சாதி | : | |
| விலாசம் | : | |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிரதிவாதியின் தாயார் 1987ம் ஆண்டு முதல் அவர் இறந்த ஆண்டான 2009ம் ஆண்டு வரை தாவா சொத்தில்தான் இருந்தார் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி பிறந்தது முதல் திருமணமாகி தற்போதுவரை தாவா சொத்தில்தான் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு நாங்கள் பலமுறை வாடகை வசூல் செய்துள்ளோம். சி செட்யூல் சொத்து எங்களுடைய சுவாதினத்தில் உள்ளதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியின் தகப்பனார் இறந்தபிறகு அவரது தாயார் என்னுடைய தந்தையுடன்தான் ஒரே வீட்டில் வசித்து வந்தார் என்று சொன்னால் தவறு. பிரதிவாதியின் தாயார் அவருடைய குடும்பத்தோடு வேளச்சேரியில் வசித்து வந்தார். பிரதிவாதி எங்களுக்கு எதிராக பொன்னேரி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கு தற்போது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. பிரதிவாதி யின் தாயார் அவருக்கு சொந்தமான சொத்தை விற்பனை செய்து என்னுடைய சகோதரரியின் பெயரில் அண்ணா நகரில் ஒரு வீடு வாங்கி கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அது என்னுடைய சகோதரி சொந்த பணத்தை கொண்டு வீடு வாங்கினார். பிரதிவாதியின் தாயார் அவருக்கு சொந்தமான வீட்டை விற்பனை செய்துதான் என்னுடைய சகோதரிக்கு அண்ணா நகரில் வீடு வாங்கி கொடுத்தார் என்றும், அதற்கு பதிலாக நாங்கள் தாவா சொத்தில் பங்கு தருவதாக ஸ்டேன்லி என்பவர் வாய்மொழிமூலமாக கூறினார் என்று சொன்னால் சரியல்ல. சி செட்யூல் சொத்து பிரதிவாதியின் சுவாதீனத்தில்தான் உள்ளது என்று சொன்னால் அதை அவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். பிரதிவாதிக்கு என்னுடைய அப்பா தானப்பத்திரம் மூலமாக சி செட்யூர் சொத்தை எழுதி கொடுக்க முன்வந்தார் என்றும் அதை நானும் எனது சகோதரியும் சேர்ந்து தடுத்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின் விவரம் வரைபடம் மூலமாக தவறாகவும், குழப்பம் ஏற்படும்

வகையிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் போலிஸ் மற்றும் ரவுடிகளின் துணையுடன் பிரதிவாதியை தாவா சொத்தான சி செட்யூல் சொத்தில் இருந்து வெளியேற்ற முயற்சி செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் ஏற்புரையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி ஒவ்வொரு நாளுக்கும் ரூ.100/- தரவேண்டும் என்று கூறி நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போதுவரை பிரதிவாதிதான் தாவா சொத்தில் வசித்து வருகிறார் என்றும் நான் பொய்யான விவரங்களை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி
பொன்னேரி.